இந்திய நாணயத்தில் தலைவர் கலைஞர் ! வெளியீட்டு விழா !

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (18.8.2024) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வின்போது, ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (18.8.2024)சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வின்போது, ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (18.8.2024) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிட வளாகத்திலுள்ள “கலைஞர் உலகம்” அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றுப் புகைப்படங்களை பார்வையிட்டார்கள். இந்நிகழ்வின்போது, ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2024) பூங்கொத்து வழங்கி வரவேற்றார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2024) பூங்கொத்து வழங்கி வரவேற்றார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2024) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிட வளாகத்திலுள்ள “கலைஞர் உலகம்” அருங்காட்சியகத்தில் கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் இருப்பது போன்று புகைப்படம் எடுத்துக்கொண்டார். இப்புகைப்படத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வின்போது, ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.